முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.165/2004**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 24.03.2026 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி Selvi.S.Padmavathi,M.L., அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 24.03.2026 | சாட்சி | பி.வா.சா. 2 |
| பெயர். | அன்புதாஸ் | வயது.. | 50 |
| தந்தை பெயர். | கணேசன் | ஊர்.. | மேலகுறியாமங்கலம் |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை ...**

1. 1ம் பிரதிவாதி ஸ்ரீராமன் எனக்கு 25 ஆண்டுகளாக பழக்கம். எனக்கு மேலகுறியாமங்கலம் சொந்த ஊர். நான் அன்பு ரேடியோஸ் கடை எண்.8, வாண்டையார் காம்பிளக்ஸ்லில் வைத்துள்ளேன். நான் லைசஸ் எடுக்கவில்லை. நான் 22 வருடமாக மேற்சொன்ன கடை வைத்து நடத்தி வருகிறேன். நான் 25 வருடமாக வாண்டையார் complex யில் கடைவைத்துள்ளேன் என்றால் கோரோனா காலத்தில் அதன் பிறகு நண்பர்கள் கடையில் உட்கார்ந்து order கிடைக்கும் போது வேலை செய்து வந்தேன். கொரோனா காலமான 2019 முதல் மேலகுறியாமங்கலம் கிராமத்தில் தான் குடியிருந்து வருகிறேன். 2019 க்கு பிறகு புவனகிரியில் கடை வைத்து தொழில் செய்யவில்லை என்றால் சரிதான். புவனகிரி வர்த்த சங்க்தில் நான் உறுப்பினராக சுமார் 15 வருடமாக இருக்கிறேன். குறிப்பிட்டு எந்த ஆண்டில் இருந்து என்றால் ஞாபகம் இல்லை.

2. புவனகிரி வர்த்த சங்கத்தில் நான உறுப்பினராக இருக்கும் போது தலைவர் ஸ்ரீராமன், மற்ற பொருப்பில் இருப்பவர்களை பற்றி எனக்கு தெரியாது ஸ்ரீராமனை மட்டும் தான் தெரியும், 1ம் பிரதிவாதி தலைவராக இருக்கும் சங்கத்தின் பெயர் புவனகிரி பூவராக சாமி வர்த்தக சங்கம் ஆகும். நான் உறுப்பினராக இருந்த போது ஸ்ரீராமன் தலைவராக இருந்தார் அதன் பிறகு 2 முறை சங்க தேர்தல் நடந்தது. எந்த ஆண்டு மேற்சொன்ன 2 சங்க தேர்தேல் நடந்தது என்று ஞாபகம் இல்லை தோராயமாக ஆண்டுகளை சொல்லமுடியுமா என்றால் ஞாபகம் இல்லை. புவனகிரி

பூவராக சாமி வர்த்தக சங்கத்தில் எத்தனை ஆண்டுக்கு ஒரு முறை தேர்தல் நடக்கும் என்றால் 5 ஆண்டுகளுக்கு 1 முறை நடக்கம். அவ்வாறு தேர்தல் நடக்கும் போது யார் யார் தலைவராக செயலாளராக தேர்தலில் நின்றார்கள் என்று ஞாபகம் இல்லை, நான் தேர்தலில் கலந்துக்கொண்ட போது தீர்மான புத்தகத்தில் கையெழுத்து போட்டிருக்கிறேன்.

3. தீர்மானத்தின் போது 12 -13 நபர்கள் வந்திருப்பார்கள். 12-13 நபர்களின் பெயர்கள் ஞாபகம் இல்லை. தேர்தல் நடந்ததை பற்றி பதிவு அலவலகத்திற்கு தெரிவித்தார்களா என்றால் எனக்கு தெரியாது. புவனகிரி வர்த்தக சங்கம் ரத்தினசுப்பிரமணியன் என்பவரால் நடத்தப்படுகிறதா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. ACP.ரத்தினசுப்பிரமணயனை எனக்கு தெரியும். இந்த வழக்கை ACP.ரத்தினசுப்பிரமணியன் தான் தாக்கல் செய்திருக்கிறார் என்றால் யார் தாக்கல் செய்திருக்கிறார் என்று தெரியாது. ரெங்கநாத பிள்ளையை எனக்கு தெரியாது. பூவராகசாமி வர்த்தக சங்கத்திற்கு முன்பு புவனகிரி வர்த்தக சங்கம் நடந்ததா என்றால் நடந்தது கேள்வி பட்டிருக்கிறேன். நான் எனது நண்பர் செல்வராஜ் நடத்தும் கடையில் உட்கார்ந்திருப்பேன். அவருடைய கடை எண்.8, வாண்டையார் complex இல் இருந்தது. எத்தனை ஆண்டுகளாக செல்வராஜ் வாண்டையார் complex இல் கடை வைத்திருந்தார் என்றால் சுமார் 20 ஆண்டுகளாக. எனது நண்பர் செல்வராஜ் எந்த சங்கத்திலும் உறுப்பினராக இல்லை.

4. வாண்டையார் complex ல் மொத்தம் 16 கடை உள்ளது, 16 கடைகளை நடத்துபவர்கள் யாரும் மேற்சொன்ன இரு சங்கத்திலும் உறுப்பினராக இல்லை. ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் பூவராகசாமி வர்த்தக சங்கத்தில் பொது கூட்டம் நடக்கம் என்றால் சரிதான். கடந்த ஆண்டு அவ்வாறு பொது கூட்டம் நடந்தது தேதி, மாதம் ஞாபகம் இல்லை. பூவராகசாமி வர்த்தக சங்கத்திற்கு சொத்து உள்ளது. எங்கிருக்கிறது என்றால் 1ம் பிரதிவாதி ஸ்ரீராமன் கடை மற்றும் வீட்டிற்கு பக்கத்தில் உள்ளது. ஸ்ரீராமனின் வீடு மற்றும் கடை பூவராகசாமி கோயில் சொத்து ஆகும். எந்த அடிப்படையில் கோயிலுக்கு பாத்தியம் என்றால் எனக்கு தெரியாது. பட்டா எண். 1ம் பிரதிவாதி ஸ்ரீராமன் பெயரில் பட்டா உள்ளதாக கூறியுள்ளார் பட்டாவை நான் பார்க்கவில்லை. ஸ்ரீராமன் குடியிருக்கும் வீடு, கடை அவருக்கு எவ்வாறு கிடைத்தது என்று தெரியாது.

5. மேற்சொன்ன 12 நபர்களின் பெயர்கள் எனக்கு ஞாபகம் இல்லை. நான் பூவராக சாமி வர்த்த சங்கத்தில் உறுப்பினராக உள்ளேன் என்று வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் மேற்சொன்ன அன்பு ரேடியோஸ் கடை நடத்துவதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. ரெங்கநாதபிள்ளை தலைவராக இருந்த சமயத்தில் நான் சங்கத்தில் உறுப்பினராக இல்லை. 1ம் பிரதிவாதி ஸ்ரீராமன் கடை நடத்துவதற்கு யாருக்கும் வாடகை கொடுத்துவருவதில்லை. எதனால் 1ம் பிரதிவாதி வாடகை கொடுப்பதில்லை என்றால் பக்கத்தில் இருக்கும் 4 கடைகளுக்கான வாடகையை இவர்தான் பெற்று வருகிறார். வர்த்தக வங்க கட்டிடம் 10 ஆண்டுகளாக சேதம் அடைந்த நிலையில் உள்ளது, 1ம் பிரதிவாதி தவிர வேறு யாரும் அங்கு குடியிருக்கவில்லை என்றால் சரிதான்.

6. 1ம் பிரதிவாதி குடியிருக்கும் வீடு, கடை சேதமான நிலையில் உள்ளதா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதியின் பிரஸ்-க்கு மேற்கில் 4 கடைகள் உள்ளது, மேற்கால் உள்ள கடைகளின் கட்டிடம் உள்ளது ஆனால் சேதமான நிலையில் உள்ளது. மேற்கில் இருக்கும் கடைகளை ஏன் வாடகைக்கு விடவில்லை என்று 1ம் பிரதிவாதிக்கு தான் தெரியும். எனக்கு 1ம் பிரதிவாதி எவ்வாறு பழக்கம் என்றால் நான் eletrician தொழில் செய்வதால் பழக்கம். 1ம் பிரதிவாதி printing press-க்கான electrician வேலையை நான் செய்வது இல்லை. நான் 1ம் பிரதிவாதியின் நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-.S.Padmavathi,
Principal District Munsif
Chidambaram.